ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.
Vol No. : 8 Issue No. : 47 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Feb 20-26, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# மக்களின் வளர்ச்சியே என் மகிழ்ச்சி!



**கவிதா ராஜன்,** 63வது வார்டு, பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர்

> **வார்டு மக்களிடையே ஒற்றுமையையும், மனிதநேயத்தையும் மேம்படுத்தி சிறந்த பொருளாதார வளத்துடன் கூடிய வார்டாக மாற்றுவதே ஒரு மாமன்ற உறுப்பினரின் முக்கிய பணியாகும். வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் இந்த உயர்ந்த சிந்தனையை விதைக்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எனது வளர்ச்சித் திட்டங்களின் மூலம் பாடுபடுவேன்.**



பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த போது.

மக்களுக்காக யார் குரல் கொடுக்கிறார்கள், அவர்களுக்காக யார் முதலில் வந்து நிற்கிறார்கள் என்றால் அது பாரதிய ஜனதா கட்சியாக தான் இருக்கும் என்று பெருமிதம் பட கூறுகிறார் 63 வது வார்டு பாஜக வேட்பாளர் கவிதா ராஜன். பிரதமர் மோடி, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ ஆகிய மூவரின் அரசியல் பணிகளே தன்னை அரசியலில் ஈடுபட வைத்தது எனவும் தெரிவிக்கிறார்.

மேலும் இவர் மென்பொறியாளராக பணி புரிந்து, தொழில் முனைவோராகவும் திகழ்ந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே அரசியலுக்கு வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. டெல்லியை தலைமையிடமாக கொண்ட இந்தியன் ஆச்சீவர் போரம் என்ற அமைப்பு சிறந்த தொழில் முனைவோருக்கான விருதினை கவிதா ராஜனுக்கு கொடுத்து கௌரவப்படுத்தி உள்ளது.

2016ம் வருடம் ராமநாதபுரம் பகுதி பாரதிய ஜனதா கட்சியினராலும், பொது மக்களாலும் மிகச் சிறந்த சமூக சேவகர் என கண்டறியபட்டவர். அன்று முதல் இன்று வரை பாரதிய ஜனதா கட்சி மூலம் பொதுமக்களுக்கு சேவை செய்வதில் சிறந்தவர் என அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறார். கட்சியின் அகில இந்திய மகளிர் அணி தலைவியும், தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் ராமநாதபுரம் பகுதியில் நடத்திய நிகழ்ச்சிகளில் முக்கிய பங்காற்றினார்.

அதிகாரத்தில் இல்லாத போதே ஏராளமான மக்கள் சேவை செய்த கவிதா ராஜன், தான் மாமன்ற உறுப்பினரானால் செய்ய உள்ள பணிகளையும் பட்டியலிடுகிறார். நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பாஜகவிற்கு உள்ள வெற்றி வாய்ப்பு குறித்தும், 63 வது வார்டில் உள்ள முக்கிய பிரச்சினை உள்ளிட்ட பல தகவல்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

### பிரதமர் மோடியின் செயல் திட்டங்களை எப்படி பார்க்கிறீர்கள் ?

அவர் ஆட்சிக்கு வந்தது முதல் மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி உள்ளார். அதுவும் எதெல்லாம் சாத்தியமில்லை என்று நினைத்தோமோ அவையெல்லாம் நடைபெற்று இருக்கிறது. அவருடைய திட்டங்கள் எல்லாம் உடனடியான கவர்ச்சிகரமான திட்டங்கள் கிடையாது. இன்றைக்கு செய்தால் இன்றே பலன் கிடைக்கலாம் என்கிற மாதிரி கிடையாது. இதைச் செய்து அடுத்த தேர்தலில் ஓட்டு வாங்கலாம் என்பது மாதிரியும் இருக்காது. அவருடைய அனைத்து திட்டங்களும் தொலைநோக்கு கொண்டதாக நீண்ட நாள் பலன் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

நம்முடைய நாடு அடுத்த நிலைக்கு உயர என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் ஒரு பிரதமராக அவர் செய்து கொண்டிருக்கிறார். அதாவது 1990 களின் இறுதியில் மற்ற உலக நாடுகள் நம்மை குனிந்து பார்க்கும் நிலையில் தான் இருந்தோம் அதுவே இப்பொழுது இவர் ஆட்சியில் நம்மை நிமிர்ந்து பார்க்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறோம். அந்த அளவுக்கு மக்களுக்கான நலத் திட்டங்களை அவர் செயல்படுத்தி வருகிறார்.

### வார்டில் உள்ள முக்கியமான பிரச்சினைகள் என்ன ?

இப்பொழுது தேர்தல் சமயத்தில் மட்டுமல்லாது முன்பு மக்களை சந்திக்கும் போது கூட அவர்கள் சொல்லும் முக்கியமான குறை பாதாள சாக்கடை அடைப்பு, குப்பையை அகற்ற சரியாக வருவதில்லை போன்றவை தான்.

காரணம் இங்கே எல்லாம் சிறு சிறு வீதிகளில் நெருக்கமான வீடுகள் அமைந்துள்ள பகுதி. எனவே அதுதான் முக்கியமான பிரச்சினையாக சொல்கிறார்கள் அடுத்தது குடிநீர் பிரச்சினையாகும்.

அதே போல ஒவ்வொருவருக்கும் நிறைய கனவுகள் இருக்கும். பல பேருக்கும் தங்கள் வேலைக்குப் போவதை விட ஏதாவது சொந்த தொழில் செய்யலாம் என்ற எண்ணம் கொண்ட பல பேரை சந்திக்க முடிகிறது. கடந்த சில ஆண்டுகளாக மாமன்ற உறுப்பினர்கள் இல்லாததால் மாநகராட்சி அளவில் மக்கள் பணியில் ஒரு மெத்தனம் காணமுடிகிறது. எனவே அதற்கு முன்னுரிமை கொடுத்து அந்த மக்கள் நலப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும். மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை மக்களிடம் சரியாக கொண்டு சேர்க்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.

### உள்ளாட்சித் தேர்தலில் பாஜகவுக்கு வரவேற்பு எவ்வாறு உள்ளது ?

கொங்கு மண்டலத்தைப் பொறுத்தவரை திமுகவுக்கு மக்கள் பெரியதாக ஆதரவு தரவில்லை. அதனால் தான் அவர்கள் இங்கு சட்டமன்றத் தேர்தலில் பெரிய அளவில் வெற்றி பெற முடியவில்லை. அந்த வகையில் பாரதிய ஜனதா கட்சிக்கு இங்கே முக்கியத்துவம் உண்டு. அதுவும் அல்லாமல் இங்கு உள்ள மக்கள் நல்ல அறிவுத்திறன் உள்ளவர்கள். எதையும் சிந்தித்து முடிவு எடுப்பார்கள். 2016 இல் ஜெயலலிதா இருந்தபோது நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தனித்து தான் வேட்பாளர்களை நிறுத்தி இருந்தார்கள். அந்த வகையில் உள்ளாட்சித் தேர்தலில் தனியாக நிற்பதால் எனக்கு பாதிப்பு இருப்பதாக தோன்றவில்லை.

இந்த வார்டில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்கள் நலப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன். என்னை மக்களுக்கு நல்ல அறிமுகம் உள்ளதாலும், நான் வசிப்பது இந்த வார்டு என்பதாலும் பெரிதாக எந்த சிக்கலும் இல்லை. அதனால் மக்களுக்கு என்னை நன்கு தெரியும். யார் வீட்டுக்குள் நான் போனாலும் கவிதா உள்ளே வாம்மா என்று சொல்லுமளவுக்கு அறிமுகமும் வரவேற்பும் உள்ளது.

### பாஜகவுக்கு வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது ?

சென்ற முறை அதிமுகவுடன் கூட்டணி இருந்தது, இந்த முறை இல்லை. ஆனால் இவ்வளவு நாள் நாங்கள் பணியாற்றியதன் தாக்கம் எப்படி என்று அறிந்து கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அடுத்ததாக இந்த முறை திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, மக்களுக்காக அதிகமாக குரல் கொடுப்பது பாரதிய ஜனதா கட்சிதான். நமது மக்களை பொறுத்தவரை நமக்காக யார் குரல் கொடுக்கிறார்கள் நமக்காக யார் முதலில் வந்து நிற்கிறார்கள் என்று பார்ப்பார்கள் சிந்திப்பார்கள். அந்த வகையில் முன்னால் நிற்பது பாரதிய ஜனதா கட்சிதான்.

### அரசியலுக்கு வந்தபின் மிகவும் மகிழ்வான தருணமாக எதை நினைக்கிறீர்கள்?

பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்தித்ததையே மிகவும் மகிழ்வான தருணமாக கருதுகிறேன். பாஜக எந்த ஒரு நிலையிலும் மக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து அங்கீகரிக்க கூடிய கட்சி. அந்த வகையில் நான் செய்த மக்கள் பணிகளுக்காக 2016 மற்றும் 2018 இல் பிரதமரை சந்திக்க கூடிய சூழலும், பேசுவதற்கான வாய்ப்பும் கிடைத்தது. இது திறமைக்கும், தேசபக்திக்கும், மக்களுக்கு செய்த பணிகளுக்காக எனக்கு கிடைத்த அங்கீகாரம் என்றே சொல்லலாம்.

### நீங்கள் செய்த மக்கள் பணிகளில் உங்கள் மனதுக்கு நெருக்கமானது எது ?

கொரானா காலகட்டத்தில் மக்களின் வாழ்வாதாரம் மிகவுமே பாதிக்கப்பட்டது. எனவே அவர்களுக்கு உதவும் வகையில் எனது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள 2000 த்திற்கும் அதிகமான ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தினருக்கு, தேவையான பொருட்களை அருகில் உள்ள மளிகை கடையில் வாங்கிக் கொள்ள ரூ.200 மதிப்பிலான இலவச கூப்பன்களை வீடுதேடி விநியோகம் செய்தேன்.

கொரோனா காலத்திற்கு முன்பு வரை, கோடை காலத்தை மக்கள் எதிர்கொள்ளும் வகையில், மண்பானை குடிநீர் குடில் அமைத்து மக்களுக்கு குடிநீர் வழங்கியுள்ளேன்.

குழந்தைகளின் எண்ணங்களையும், கனவுகளையும் வெளிப்படுத்தும் விதத்தில் அவர்களுக்காக '**எனது கனவு**' என்ற ஓவியப் போட்டியை நடத்தினேன்.

வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் 300க்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டு, அதனை பராமரிக்க ஒரு நபரையும் நியமித்து, அதற்கு தினம்தோறும் தண்ணீர் ஊற்றுவது, கூண்டு அமைப்பது போன்ற பணிகளை இன்று வரையிலும் செய்து வருகிறேன்.

நாட்டை மட்டும் சுத்தப்படுத்தினால் போதாது வீட்டையும் தூய்மையாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வித்தியாசமான தூய்மை போட்டியினை எனது வார்டில் நடத்தினேன். இதில் பெண்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு பங்கேற்றனர். இதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பெண்கள் எப்பொழுதும் சுய சார்புடனும், தன்னம்பிக்கையுடனும் திகழவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவள் நான். அதற்காக இலவசமாக பெண்களுக்கு தையல் வகுப்புகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்.

இதன் மூலம் நூற்றுக்கணக்கான பெண்கள், தையல் தொழிலை கற்றுள்ளனர். தற்போது அவர்கள் தனியாக தொழிலும் செய்து வருகின்றனர்.

### உங்கள் பகுதியில் செயல்படுத்தும் திட்டங்கள் பற்றி கூறுங்கள் ?

63 வது வார்டு பகுதியை கோவை மாநகராட்சியின் முதல் 100 சதவீத டிஜிட்டல் வார்டாக மாற்றுவேன். வார்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இலவச WIFI வழங்கப்படும். மக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர், சாக்கடை, தெருவிளக்கு ஆகியவற்றிற்கு மிகமிக முக்கியத்துவம் கொடுத்து, இவற்றினை முறையாக பராமரிப்பேன்.

பிளாஸ்டிக் இல்லா தூய்மை பகுதியாக வார்டு மாற்றப்படும். வார சந்தை ஒழுங்கு படுத்தப்படும். தகுதியுள்ள அனைவருக்கும் வீடு கட்டுவதற்கு அரசாங்கத் திட்டத்தின் மூலம் கடனுதவி பெற்றுத் தரப்படும். சுய உதவிக் குழுக்களுக்கு நவீன தொழிற்பயிற்சி அளித்து கடன் பெற்று தரப்படும். ரேஷன் விநியோகம் முறைப்படுத்தப்படும். கைம்பெண்கள், ஆதரவற்றோர் மற்றும் முதியவர்களுக்கு பென்ஷன் பெற்று தரப்படும்.

பாதுகாக்கப்பட்ட பூங்காக்களும் பெரியோர்கள் மற்றும் முதியோர்களுக்கான சமுதாயக்கூடம் ஏற்படுத்தி அங்கே நூலகம், செஸ், கேரம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் அமைத்து தரப்படும்.

சாலைகள் சீரமைப்பு, துப்புரவுப் பணிகள், முறையான குடிநீர் விநியோகம், பூங்கா அமைப்பு மற்றும் பராமரிப்பு போன்றவற்றோடு ஒரு கவுன்சிலரின் பணி முடிவடைந்து விடுவதில்லை. வார்டு மக்களிடையே ஒற்றுமையையும், மனிதநேயத்தையும் மேம்படுத்தி சிறந்த பொருளாதார வளத்துடன் கூடிய வார்டாக மாற்றுவதே ஒரு மாமன்ற உறுப்பினரின் முக்கிய பணியாகும். வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் இந்த உயர்ந்த சிந்தனையை விதைக்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எனது வளர்ச்சித் திட்டங்களின் மூலம் பாடுபடுவேன்.

### உங்கள் தேர்தல் அறிக்கை பற்றி ஒரு வரியில் கூறுங்கள் ?

"மக்களின் வளர்ச்சியில் மகிழ்ச்சி என்பதே என் அடிப்படை கொள்கை". அதற்கான வளர்ச்சி திட்டங்களை வகுத்து, மத்திய அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பேன்.

### இந்தமுறை தங்களுடைய வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது ?

100% நம்பிக்கையுடன் இருக்கிறோம். நாங்கள் செய்த மக்கள் நல பணிகளை எண்ணிப்பார்த்தால், நூறு சதவிகிதம் வெற்றி வாய்ப்பு உள்ளது என்றே கூற வேண்டும்.



# தீவிர அரசியலில் ஈடுபடுகிறாரா விஜய்?

**சாணக்கியன்**
**தி கோவை மெயில்**

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் விஜய் மக்கள் இயக்கம் போட்டியிடும் நிலையில் தீவிர அரசியலில் நடிகர் விஜய் களம் இறங்கப் போகிறாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தமிழகத்தில் 12,838 பதவிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பிப்.19 ஆம் தேதி ஒரே கட்டமாக நடக்கிறது. இதில் திமுக, அதிமுக, பாஜக, நாம் தமிழர், பாமக, மக்கள் நீதி மய்யம், அமமுக உள்ளிட்ட பிரதான அரசியல் கட்சிகள் தனி அணிகளாக தேர்தலை சந்திக்கின்றன. இதற்கிடையே, விஜய் மக்கள் இயக்கமும் தனித்து களம் காண்பதாக அறிவித்து களத்தில் குதித்துள்ளது.

ஏற்கெனவே நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் கட்சி அடிப்படையில் இல்லாத பதவிகளான கிராம ஊராட்சி உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டதாகவும், 169 இடங்களில் போட்டியிட்டு 115 இடங்களை கைப்பற்றியதாகவும் அறிவித்தது விஜய் மக்கள் இயக்கம். 9 மாவட்டங்களில் உள்ள 23,221 பதவிகளில் 169 இடங்களில் போட்டி என்றால் அது எண்ணிக்கையில் ஒரு சதவீதத்துக்கும் கீழான இடங்கள் தான்.

விஜய் மக்கள் இயக்கம் தேர்தலுக்கு முன்பாக வேட்பாளர்கள் பட்டியலை அறிவிக்காமல், தேர்தல் முடிவுக்கு பிறகு எத்தனை இடங்களில் போட்டியிட்டு எத்தனை இடங்களில் வெற்றி என அறிவிப்பது வெளிப்படைத் தன்மையற்ற விஷயம் என அப்போதே பல அரசியல் விமர்சகர்கள், ஊடகங்கள் விமர்சனம் செய்த போது நெருக்கடிக்கு உள்ளானது விஜய் மக்கள் இயக்கம். இப்போது நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலிலும் மீண்டும் அதே உத்தியை தான் விஜய் மக்கள் இயக்கம் கையாளுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதுவரை எத்தனை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பதை விஜய் மக்கள் இயக்கம் இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

அந்தந்த மாவட்டத்தில் அந்த இயக்கத்தை சேர்ந்தவர்களிடம் விசாரித்த வகையில், சேலம், தூத்துக்குடி மாநகராட்சியில் ஒரு வார்டில் கூட விஜய் மக்கள் இயக்க வேட்பாளர்கள் போட்டியிடவில்லை. சென்னையில் 200 வார்டுகளில் 2 பேர், ஈரோடு மாநகராட்சியில் 60 வார்டுகளில் 3 பேர், திருச்சி மாநகராட்சியில் 65 வார்டுகளில் 13 பேர் போட்டியிடுவதாக தகவல் கிடைத்துள்ளது.

> **நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை பொறுத்தவரை அனைத்து பதவிகளுமே கட்சி அடிப்படையில் தேர்வாகக்கூடியது. ஆனால், விஜய் மக்கள் இயக்கமோ பதிவுபெற்ற அரசியல் கட்சி அல்ல என்பதால் இந்த இயக்கம் சார்பில் போட்டியிடுவோர் சுயேச்சைகளாகவே கருதப்பட்டு சுயேச்சை சின்னங்களில் தான் போட்டியிடுகின்றனர்.**

கோவை, திருப்பூர், திருநெல்வேலி போன்ற முதல்நிலை மாநகராட்சிகளிலும் ஒற்றை இலக்கத்தில் தான் வேட்பாளர்களை இந்த இயக்கம் சார்பில் போட்டியிடுவதாக தெரியவந்துள்ளது. மொத்தமாக பார்த்தால் 21 மாநகராட்சிகளிலும் இதேபோன்ற நிலை தான் இருக்கக்கூடும். நகராட்சிகள், பேரூராட்சிகளில் திமுக, அதிமுக தவிர்த்து பிற அரசியல் கட்சிகளே வேட்பாளர்களை களம் இறக்க சிரமப்பட்டுள்ள நிலையில், விஜய் மக்கள் இயக்கம் சார்பில் ஒரு சில வேட்பாளர்கள் தான் நிற்கக்கூடும்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை பொறுத்தவரை அனைத்து பதவிகளுமே கட்சி அடிப்படையில் தேர்வாகக்கூடியது. ஆனால், விஜய் மக்கள் இயக்கமோ பதிவுபெற்ற அரசியல் கட்சி அல்ல என்பதால் இந்த இயக்கம் சார்பில் போட்டியிடுவோர் சுயேச்சைகளாகவே கருதப்பட்டு சுயேச்சை சின்னங்களில் தான் போட்டியிடுகின்றனர்.

கட்சி அடிப்படையில் தேர்வாகக் கூடிய பதவிகளில் சுயேச்சைகளால் பெரிய அளவில் சாதிக்க முடியுமா என்ற மிகப்பெரிய கேள்விக்குறி எழுந்துள்ளது. ஒரே உள்ளாட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களை இந்த இயக்கம் களம் இறக்கினாலும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனி சின்னம் தான் கிடைத்துள்ளது. தேர்தலுக்கு முன்பாகவே தங்களது வேட்பாளர்கள் பட்டியலை வெளிப்படையாக அறிவித்தால் தான் சுயேச்சைகளில் யார் விஜய் மக்கள் இயக்க வேட்பாளர்கள் என்பதை வாக்காளர்கள் அடையாளம் காண முடியும். தேர்தலுக்கு பிறகு எத்தனை பேர் வெற்றிபெற்றுள்ளனர் என்பதை ஊடகங்களால் கணக்கிட முடியும்.

கட்சி சின்னங்கள் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடப்பதால் கட்சி சார்ந்து இயங்கக்கூடிய விஜய் ரசிகர்கள் தங்களுக்கு பிடித்த அரசியல் கட்சிகளின் சின்னங்களை தவிர்த்துவிட்டு சுயேச்சை சின்னங்களில் விஜய் மக்கள் இயக்க வேட்பாளர்களுக்கு எவ்வளவு சதவீதம் பேர் வாக்காளிப்பார்கள் என்பது தேர்தல் முடிந்த பிறகு தான் கண்டுபிடிக்க முடியும்.

இப்போது வேட்பாளர் பட்டியலை அறிவிக்காமல், தேர்தல் முடிவு வந்த பிறகு வெற்றி பெற்றவர்கள் பட்டியலை மட்டுமே வெளியிட்டால் வெற்றி பெற்றவர்கள் விஜய் மக்கள் இயக்க வேட்பாளர்கள் தானா என்பதை பொதுமக்களும், ஊடகங்களும் கண்டறிவது மிகப்பெரிய சிக்கல் தான். இந்த சிக்கல்களுக்கு ஒரே முடிவு, தேர்தலுக்கு முன்பாக எத்தனை உள்ளாட்சிகளில் எத்தனை வேட்பாளர்கள் களம் இறக்கப்பட்டுள்ளனர், அவர்கள் யார் யார் என்பதை, வெளிப்படைத் தன்மையாக இப்போதே விஜய் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால் மட்டுமே உள்ளாட்சியில் விஜய்யின் உண்மையான செல்வாக்கை கணக்கிட முடியும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

**அரசியல் களத்தில் ரசிகர் மன்றங்கள்:** தமிழக தேர்தல் அரசியலை பொறுத்தவரை 1984 ஆம் ஆண்டில் சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்துக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் கிடைத்தது. எம்ஜிஆர் உடல் நிலை சரியில்லாமல் இருந்த போது சிவாஜி கணேசன், காங்கிரஸில் இருந்த காலகட்டத்தில் அதிருப்தியில் அவர் தனித்து போட்டியிட இருப்பதாக தகவல் வெளியானது. அப்போது காங்கிரஸ் தலைமை சிவாஜியிடம் சமாதானம் பேசி சிவாஜி ரசிகர் மன்றத்தை சேர்ந்த 15 பேருக்கு சட்டப்பேரவைத் தேர்தலிலும், மக்களவைத் தேர்தலில் 5 பேருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கியது.

அதேபோல, 2001 இல் விஜய்காந்த் ரசிகர் மன்றம் பெரிய அளவில் கட்டமைப்பை உருவாக்கியது. குறிப்பாக 2011 உள்ளாட்சித் தேர்தலில் விழுப்புரம், கடலூர் போன்ற பகுதிகளில் பேரூராட்சி வார்டு உறுப்பினர் பதவிகள், ஒன்றியக்குழு உறுப்பினர் பதவிகளையும் கணிசமான எண்ணிக்கையில் அம்மன்றம் கைப்பற்றியது. இதுவே 2005 இல் தேமுதிக தொடங்கப்பட்ட போது இந்த ரசிகர் மன்றம் ஆணிவேராக நின்று உதவியது.

**ரஜினி மக்கள் மன்றம்:** ரஜினி மக்கள் மன்றம் மிகப்பெரிய கட்டமைப்பை உருவாக்கினாலும் அது தேர்தல் அரசியலுக்குள் வராமலே முடிந்து போனது. விஜய்யின் அரசியல் ஆர்வத்தை புரட்டிப் பார்த்தால் 2009 மக்களவைத் தேர்தலில் ஈழப் போர் உச்சக் கட்டத்தில் இருந்தபோது, காங்கிரஸில் சேர முயற்சி எடுத்ததாக தெரிகிறது. காங்கிரஸில் பல கோஷ்டிகள் இருந்த நிலையில், மீண்டும் ஒரு கோஷ்டியை உருவாக்க காங்கிரசுக்கு மனமில்லாமல் விஜய்க்கு பதவி தர சம்மதிக்கவில்லை.

இருப்பினும், விஜய்யின் அரசியல் ஆர்வம் தொடரவே செய்தது. 2011 பேரவைத் தேர்தலில் அதிமுக, தேமுதிக அணிக்கு ஆதரவு கரம் விஜய் நீட்டியதாக கூறப்படுகிறது. அனைத்து தொகுதிகளிலும் விஜய் மக்கள் இயக்கத்தினர் அதிமுக அணிக்காக வேலை செய்ததாக தகவல் உண்டு. குறிப்பாக அதிமுக ஆதரவு சுனாமி அலை வீசிய 1991 பேரவைத் தேர்தலிலேயே தோற்காத திமுகவை சேர்ந்த பரிதி இளம்வழுதி, எழும்பூர் தொகுதியில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தேமுதிக வேட்பாளர் நல்லதம்பியிடம் தோல்வி அடைந்தது கூட விஜய் மக்கள் இயக்கத்தை சேர்ந்தவர்களின் தீவிர தேர்தல் பணி தான் என்றும் பரவலாக பேசப்பட்டது.

அதன்பிறகு நடந்த உள்ளாட்சித் தேர்தலிலும் சைதை துரைசாமிக்கு ஆதரவாக விஜய் மக்கள் இயக்கம் வேலை செய்தது. இப்படிப்பட்ட சூழலில் அதிமுக அணிக்கு அணில் போல விஜய் மக்கள் இயக்கம் வேலை செய்தததாக எஸ்.ஏ.சந்திரசேகர் பேட்டி அளித்ததை ஜெயலலிதா ரசிக்கவில்லை.

இதற்கிடையே அரசியலில் அமைதியாக இருந்த விஜய், 2016 இல் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு 2017 இல் வெளிவந்த மெர்சல் திரைப்படத்தில் சில காட்சிகளை வைத்து மீண்டும் அரசியல் ஆர்வத்தை வெளிப்படுத்தினார். அது மெர்சலுக்கு நல்ல வசூலை கொடுத்தது. ஆனால், அந்த படத்துக்கு எதிராக ஹெச்.ராஜா, தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் போராடிய போது படத்துக்கு பிரச்சனை வந்துவிடக்கூடாது என்பதற்காக அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமியையும் சந்தித்தார் விஜய்.

அதன்பின் 2018 நவம்பரில் வெளிவந்த சர்க்கார் திரைப்படத்தில் அதிமுகவுக்கு எதிரான காட்சிகளை இடம்பெற செய்தார் விஜய். இதனால் அதிமுக அரசு சர்க்காருக்கு அதிக நெருக்கடிகளை கொடுத்தது. இருப்பினும், அதிமுக அரசை எதிர்க்காமல், சில காட்சிகளை நீக்கவும் விஜய் ஒத்துக் கொண்டார்.

தொடர்ந்து, 2021 ஜனவரியில் மாஸ்டர் திரைப்படம் வெளிவரும் சூழலில் திரையரங்குகளில் கரோனா கட்டுப்பாடு காரணமாக 50 சதவீதம் மட்டுமே அனுமதி இருந்தது. அது வசூலை பாதிக்கும் என்பதால் விஜய் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து 100 சதவீத இருக்கையை பயன்படுத்தலாம் என தளர்வுகளை பெற்றார். ஆனால், அடுத்த இரண்டு தினங்களுக்குள் மத்திய உள்துறை அமைச்சகம் மாநில அரசு இதை அறிவிக்க முடியாது என அறிவித்தது.

அதன் பிறகு 2021 பேரவைத் தேர்தலில் விஜய் போட்டியிட வேண்டும் என சந்திரசேகர் எண்ணினார். ஸ்டாலினும், எடப்பாடி பழனிசாமியும் தங்களை முன்னிறுத்தி தேர்தலை சந்திக்காமல் இருந்த நிலையில் விஜய் அரசியல் களத்தில் குதித்தால் சரியான நேரமாக இருக்கும் என கணக்கு போட்டார். ஆனால், விஜய் அதை மறுத்துவிட்டார்.

1991 க்கு பிறகு ரஜினி காந்துக்கு அரசியல் பிம்பம் என்பது அவரது திரைப்படங்கள் உதவின. குறிப்பாக அப்போது நிரூபிக்கப்பட்ட வாக்கு வங்கியை வைத்திருந்த மூப்பனார், எம்.ஜி.ஆரின் வலதுகரமாக இருந்த ஆர்.எம்.வீரப்பன், ஜெயலலிதாவின் வலதுகரமாக இருந்த திருநாவுக்கரசர், வைகோ, அப்போதைய பிரதமர் பி.வி.நரசிம்மராவ், மாநில காங்கிரஸ் தலைவர் குமரிஆனந்தன், உள்ளிட்டோர் ரஜினியை முதல்வர் வேட்பாளர்களாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தனர். அந்த பிம்பம் இயல்பாகவே ரஜினிக்கு கிடைத்தது. கருணாநிதி கூட ரஜினிகாந்தை அரசியல் சக்தியாக ஏற்றுக்கொண்டார்.

அதேபோல 2014 இல் அப்போதைய பிரதமர் வேட்பாளர் மோடி, ரஜினியை வீடு தேடிச் சென்று சந்தித்தார். இதுபோல பெரிய அரசியல் தலைவர்கள் ரஜினியை அரசியல் சக்தியாக ஏற்றுக்கொண்டனர். ஆனால், விஜய்யை அரசியல் சக்தியாக கடந்த வாரம் வரை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. புதுவை முன்னாள் எம்.எல்.ஏ வும், புதுவை விஜய் மக்கள் இயக்கத்தின் பொது செயலாளருமான புஸி ஆனந்துக்கும், முதல்வர் ரங்கசாமிக்கும் இருந்த தொடர்பு காரணமாக ரங்கசாமி, விஜய் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளார் புஸி ஆனந்த். இதுவே விஜய்க்கு அரசியல் அரங்கில் கிடைத்த முதல் அங்கீகாரம்.

## "நாவுக்குள் புலியாடுமே!" - இயகோகா சுப்பிரமணியம்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நெருங்கிய நண்பர் வேட்டைக்காரன்புதூர் முத்துமாணிக்கம், 'வேட்டைக்கு வந்த சிங்கம்' என்ற பெயரில் அவரும் சிவாஜியும் இணைந்து காட்டில் வேட்டையாடிய அனுபவத்தைப் புத்தகமாக எழுதலாம் என்று ஏற்பாடு செய்து மரபின்மைந்தன் முத்தையா எழுத விஜயா பதிப்பகம் அதை வெளியிட்டது.

அது தொடர்பாக பேச, அவரது சேத்துமடை பண்ணை வீட்டுக்குச் சென்ற போது அங்கிருந்த ஒரு ஓவியம் என்னைக் கவர்ந்தது. முத்துமாணிக்கம் இளவயதில் கம்பீரமாக இருக்க அழகிய வண்ணத்தில் வரையப்பட்டது. 'உஷா மங்கேஷ்கர் வரைந்த படம் இது. இதேபோல் கணேசனையும் அவர் வரைந்துள்ளார்' என்று அவர் தெரிவித்தார். உடனே, அவரது சகோதரி லதா மங்கேஷ்கரை ஒருமுறை சந்திக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டேன்.

"அதற்கென்ன, சிவாஜி அமரரான பின் தொடர்ந்து நடந்து வரும் பிறந்த நாள் கூட்டத்திற்காக வருகிறார். புத்தக வெளியீட்டையும் அப்போது வைத்துக் கொள்ளலாம். நிச்சயம் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றார். ஆனால், உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அந்த நிகழ்வில் லதா மங்கேஷ்கர் கலந்து கொள்ளவில்லை. ஏமாற்றமே!.

இருப்பினும், சில மாதங்கள் கழித்து மும்பை சென்று பெத்தர் ரோடு இல்லத்திலேயே சந்திக்க ஏற்பாடு செய்தார். இந்த சந்திப்பு நடிகர் திலகத்தின் மூத்த மகன் ராம்குமார் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பிட்ட நாளன்று முத்துமாணிக்கம், எங்களது மும்பை அலுவலக நிர்வாகி சுரேஷ் நம்பியார் மற்றும் இரு நண்பர்களுடன் நான் சென்றேன். மிகவும் பிரசித்தி பெற்ற விலாசம் அல்லவா. முத்துமாணிக்கம் அண்ணனும். நண்பர்களும் வந்திருக்கிறார்கள் என்றதும் ராஜமரியாதையுடன் நாங்கள் அவரது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். வரவேற்பறையின் ஒரு பகுதியில் நான்கைந்து பேர் அமர்ந்திருந்தனர். நாங்கள் வரவேற்பறையின் சோபாக்களில் அமர்ந்தோம். அவருடைய சகோதரி மகன் யோகி எங்களுடன் அமர்ந்து ராம்குமார் தொலைபேசியில் பேசியதைத் தெரிவித்தார்.

சிறிது நேரம் கழித்து, லதா அம்மா அவர்கள் கைகூப்பி நமஸ்கரித்தபடியே, புன்னகை மலர்ந்த முகத்துடன் மெதுவாக நடந்து வந்தார். முத்துமாணிக்கம் ஆங்கிலத்தில் எங்களை அறிமுகப்படுத்த நாங்கள் அவரது பாதங்களில் பணிந்து வணங்கி அமர்ந்தோம்.

மிகப் பிரபலமான தலைவர்கள், நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், கவிஞர்கள் எழுத்தாளர்களையெல்லாம் காணும்போது, நம்மை அறியாமல் ஒரு மகிழ்ச்சியும் உற்சாகமும் நம்மைத் தொற்றிக் கொள்ளும். சில சமயங்களில் உணர்ச்சிப் பிரவாகத்தில் உளறுபவர்களைக் கூட கண்டிருக்கின்றேன். இதோ, என் முன்னால் லதா மங்கேஷ்கர். இந்தியாவின் மிகச் சிறந்த பாடகி. உலகமெங்கும் ரசிகர்கள் அவர் குரலுக்கு அடிமை. மன்னாதி மன்னர்கள், பிரதமர்கள், ஜனாதிபதிகள், மந்திரிகள், தொழிலதிபர்கள், மேல் தட்டிலிருந்து, அடித்தட்டு வரை அவரது பாடலை ரசிக்காத இந்தியர்கள் மிகக்குறைவு.

ஒரு கையொப்பத்துக்காகவும், அவரோடு ஒரே ஒரு புகைப்படம் எடுக்கவும் ஆசைப்படாத திரையுலகக் கலைஞர்களே இல்லை எனலாம். அப்படி இருக்கும்போது, பொது ஜனங்களுக்கு ஆசையில்லாமல் போகுமா? சிறிதுநேரம் முத்து மாணிக்கம் அண்ணனோடு உரையாடிவிட்டு, அங்கே எங்களுக்கு முன் வந்து அமர்ந்திருந்தவர்களில் ஒருவரை அழைத்து, "மதராஸில் இருந்து வந்திருக்கிறார்கள். கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று அவர்களிடம் அன்பாகக் கேட்டுக் கொண்டார். அந்த கொஞ்ச நேரம் இரண்டு மணி நேரம் நீளுமென்று நாங்களும் எதிர்பார்க்கவில்லை.

எனக்கு நன்றாகவே இந்தி தெரியும். அவரது பாடலில் முதன்முதலாக என்னை மயக்கிய 'பீஸ் லால் பாத்' படத்திலுள்ள 'கஹிதீபசலே, கஹி தில்' என்ற காலத்தால் அழிக்க முடியாத காவியப் பாடலிலிருந்து இன்றைய 'ஹம் ஆப்கே ஹைன் கவுன்' படப் பாடல்களில் மிக முக்கியமான சிலவற்றைச் சொல்லி, எனது இரசிப்புத் தன்மையை எடுத்துரைத்தேன். எத்தனையோ லட்சம் பேர், அன்றாடம் அவரைப் பார்ப்பவர்கள், கூறிய அதே வார்த்தைகளை புகழ்ச்சியை மீண்டும் என் மூலமாகக் கேட்டும் அதே புன்னகையுடன் மௌனமாக அங்கீகரித்தார்.

நான் மிகவும் ரசித்த 'மொகலே ஆஜம்' படத்திலுள்ள 'மொஹப்பூத் இ ஜூட்டி கஹானி பே ரோயே' என்ற பாடலைக் குறிப்பிட்டுச் சொன்னபோது, புருவத்தை உயர்த்தி வியந்தார்கள். உரையாடலின் இடைய சுசீலா அம்மாவைப் பற்றியும், அவரது பாடல் திறமையைப் பற்றியும் மிக உயர்வாக சிலாகித்து, 'அத்தான்... என்னத்தான்' என்ற பாவமன்னிப்பு பாடலை இரண்டு வரிகள் பாடியபோது நாங்கள் அனைவரும் புளங்காகிதம் அடைந்தோம். 'ஏக் துஜே கேலியே' படமும், பாடல்களின் வெற்றியைப் பற்றியும் பேசிய போது, எஸ்.பி.பாலசுப்ரமணியத்தைப் பற்றி மிகவும் அன்போடும் பெருமையோடும் பேசினார்.

கிரிக்கெட்டைப் பற்றி பேசியபோது, நான் இன்றைய சூதாட்டக் கிரிக்கெட் விளையாட்டைப் பற்றி விமர்சித்தபோது, புன்னகையோடு சிரித்து, தனக்கு கிரிக்கெட்டின் மீதுள்ள ஆர்வத்தையும், விளையாட்டு வீரர்களைப் பற்றியும் புகழ்ந்து பேசினார். சிவாஜி மஹாராஜ், லதா மங்கேஷ்கர், கவாஸ்கர், சச்சின் டெண்டுல்கர் ஒவ்வொரு மராத்தியனும் பெருமைப்படும் புகழ்பெற்ற பெருமக்கள் அல்லவா.

"மேடம், யூ ஆர் லெஜண்ட், உங்களை சந்தித்ததில் எங்களுக்கு அளவிடமுடியாத பெருமை" என்று சொன்னேன். சிரித்துக் கொண்டே, "அப்படிச் சொல்லாதீர்கள், அண்ணன்தான் உண்மையான லெஜண்ட்" என்று நடிகர் திலகத்தைப் பற்றிப் பெருமிதமாகக் கூறினார்.

வாஞ்சையோடு சிவாஜி கணேசனை அண்ணன் என்று குறிப்பிட்டபோது மாபெரும் கலைஞர்களுக்குள் இருந்த ஒரு அற்புதமான உறவின் ஆழம் ஒரு கணம் எங்களை நெகிழவைத்தது.



லதா மங்கேஷ்கர் அவர்களுடன் இயகோகா சுப்பிரமணியம்

பாசமலர் படத்தை இந்தியில் 'ராக்கி' என்ற பெயரில் தயாரித்த போது, நடந்த சில சம்பவங்களை முத்துமாணிக்கத்துடன் பகிர்ந்து கொண்டார்.

நாங்கள் சென்றிருந்த நேரம் மதிய உணவுக்குக் கொஞ்சம் முற்பட்ட நேரம். எங்கள் ஐந்து பேருக்கும் நிறைய சிற்றுண்டிகள் வரிசையாக அணிவகுத்து வந்தன. லதா அம்மையார், அவற்றில் சிலவற்றின் சிறப்பைச் சொல்லிச் சிபாரிசு செய்து, ஒன்றுக்கு இரண்டாக உண்ண வைத்தார். விடைபெறும் நேரத்தில் திருப்பதி வெங்கடாஜலபதிக்காகப் பாடிய சுப்ரபாதம் இசைத்தட்டு உறையில் கையொப்பமிட்டு எனக்கும் முத்துமாணிக்கம் அண்ணனுக்கும் ஆளுக்கு ஒன்று பரிசளித்தார். மிகவும் பொறுமையாக எங்களோடு நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார். ஒருமுறை கோவைக்கு வந்து எங்களை எல்லாம் பெருமைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, உடல் நலம் நன்றாக இருந்தால் நிச்சயம் வருவேன் என்று உறுதியளித்தார். ஏனோ அந்த நாள் வரவேயில்லை.

'தோளுக்குள் புலியாடுமே' என்ற கண்ணதாசன் காளிதாசனைப் பாடினான். ஆனால், 'நாவுக்குள் புலியாடுமே' என்ற இந்த நாமகளின் திருமகளை நாம்பாடிக் கொண்டாட வேண்டாமா!. தமிழனாக இருந்தாலும், உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த குயிலின் குரல், நெஞ்சத்தை நெகிழச் செய்து, வாழ்வின் எல்லாக் கணங்களிலும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

எனக்கு மறுபிறவி வேண்டாம் என்று ஒருமுறை டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகைக்கு லதா பேட்டியளித்திருந்தார். அவருக்கு எதற்கு மறுபிறவி? ஏழேழு பிறவிகளுக்கும் அந்தக் குயிலின் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும்போது.

எத்தனையோ பிரபலங்களோடு புகைப்படம் எடுத்திருந்த போதிலும், எனது இல்லத்தைப் பெருமையுடன் அலங்கரிக்கும் ஒரே பிரபலத்தின் புகைப்படம் அந்த இசைக்குயிலோடு எடுத்துக் கொண்டதுதான். இது எனக்கு மட்டுமல்ல. என் தலைமுறைக்கும் பெருமை.

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்டரிங்

THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.
Vol No. : 8 Issue No. : 47 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Feb 20-26, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# உள்ளாட்சி நல்லாட்சியாக மலரட்டும்!

ஆசிரியர்
தி கோவை மெயில்

தமிழகத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு நகராட்சி, மாநகராட்சி மன்ற தேர்தல்கள் உள்ளிட்ட உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெறுகின்றன. திமுக, அதிமுக என இரு பலம் வாய்ந்த கட்சிகள் தங்களது கூட்டணி கட்சிகளோடு களம் காண்கின்றன. பிஜேபி, நாம் தமிழர், மக்கள் நீதி மய்யம் மற்றும் சுயேச்சைகள் என்று களத்தில் கூடவே போட்டியிடுகின்றனர். பொதுவாக ஊராட்சி, சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்கள் தான் அனல்பறக்கும். ஆனால் இந்த முறை உள்ளாட்சி மன்ற தேர்தலிலும் அனல் பறக்கிறது.

ஜனநாயக அமைப்பில் அமைந்த ஆட்சி முறையின் அடிப்படை அலகாகவும், மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவையாகவும் உள்ளவை உள்ளாட்சி அமைப்புகள் ஆகும். மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாக்கடை, சாலை வசதிகள் உள்ளிட்டவற்றை செய்து தரும் பொறுப்பில் நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள் உள்ளன. ஆனால் அதே அளவுக்கு அவற்றுக்கு நிதி ஆதாரமும், மற்ற ஆதாரங்களும் உள்ளதா என்று பார்த்தால் இல்லை என்றே கூற வேண்டும்.

பொதுவாக தமிழகத்தில் நகரமயமாதல் மிக அதிகமாக இருப்பதால் மாநகராட்சிகள் பிரிக்கப்பட்டு புதிய நகராட்சிகள் உருவாவதும், பேரூராட்சிகள் நகராட்சிகள் ஆக மாறுவதும், நகராட்சிகள் மாநகராட்சிகள் ஆக விரிவடைவதும் வேகமாக நடந்தேறி வருகிறது. இவ்வாறு புதிதாக பல பகுதிகள் நகரமாக இணைக்கப்படும் பொழுது அவற்றுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து தர வேண்டியது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமையாகிறது.

என்றாலும் கடமையும் பொறுப்பும் உள்ள அளவுக்கு நிதி உள்ளிட்ட மற்ற ஆதாரங்கள் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அதன் விளைவாக பல சிக்கல்கள் எழுகின்றன. சாதாரண அடிப்படை வசதிகளான குடிநீர், போக்குவரத்து, குப்பை மேலாண்மை, சாக்கடை மற்றும் கழிவு நீர் அகற்றும் பணி ஆகியவற்றை கூட சரிவர செய்ய முடியாமல் போகிறது.

கோவையைப் பொறுத்தவரை மக்களுக்குத் தேவையான பல அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட காத்துக் கொண்டிருக்கின்றன. குடிநீரை பொறுத்தவரை சிறுவாணி, அத்திக்கடவு திட்டங்கள் இருந்தாலும் கோடை காலம் வந்து விட்டால் ஒரு பதட்டம் தொற்றிக் கொள்வது வழக்கமாகி விட்டது. சில நேரங்களில் சிறுவாணி நீர்த்தேக்க வால்வு திறப்பதற்கே தமிழக முதல்வர் கேரள முதல்வருக்கு கடிதம் எழுத வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேலும் குடிநீர் வழங்கல் தற்போது ஒரு தனி நிறுவனத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதில் பல குழப்பங்கள் நிலவுகின்றன. முக்கியமாக நகரமெங்கும் பல மாதங்களாக தோண்டப்பட்ட குழிகள் ஒருபுறம், புதிதாக இணைக்கப்பட்டுள்ள பல பகுதிகளுக்கு முழுமையான குடிநீர் வசதியின்மை மறுபுறம் என்று பல சிக்கல்கள் உள்ளன. இவை தொடர்பாக ஒரு தீர்வு காணப்பட வேண்டியது அடிப்படை கடமையாகும்.

அடுத்ததாக சாலைகள் என்று பார்த்தால் பாலங்கள் பணி ஒருபுறமும், உள்ளூர் சாலைகளின் படுமோசமான நிலையும் சேர்ந்தே சில ஆண்டுகளாக கோயம்புத்தூர் பகுதியில் சாலைகளில் நடமாடுவது, வாகனம் ஓட்டுவது என்பது கிட்டத்தட்ட ஒரு தண்டனையாக மாறிவிட்டது. சந்திரனுக்கும் செவ்வாய் கிரகத்துக்கும் விண்கலம் அனுப்பும் வல்லமை கொண்ட நாம் இந்த சாலையில் உள்ள குழிகளை சரி செய்யவும், கட்டுமானங்களை நிறைவு செய்ய முடியாமலும் தடுமாறி வருகின்றோம். அதற்கடுத்ததாக மத்திய பேருந்து நிலையம் என்று கோவை நகரத்தில் இருந்து வெளியில் வெள்ளலூரில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படும் திட்டம் வந்துள்ளது. வெள்ளலூர் ஊருக்கு சென்று வருகின்ற சாலை எவ்வாறு இருக்கிறது, அந்த சாலை இத்தனை பேருந்துகளை எவ்வாறு தாக்குப்பிடிக்கும் என்பதற்கான எந்தவிதமான தெளிவும் இதுவரை தெரியவில்லை.



இன்னொருபுறம் குப்பை மேலாண்மை பெரிய பூதாகரமாக உருவெடுத்து வருகிறது. மொத்தமாக இருக்கிற குப்பைகள் எல்லாம் வெள்ளலூர் கிடங்குக்கு போகிறது. அங்கு கொட்டுவதை தவிர குப்பைகளை ஒழிப்பதற்கான முறைகளை அறிவியல் பூர்வமாகக் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும். அதைப் போலவே பெரும்பாலான கழிவுநீர் சென்று சங்கனூர் பள்ளம் போன்ற இயற்கையான நீர் நிலைகளில் கலந்து நொய்யல் ஆற்றில் கலக்கின்றன. அவற்றை சுத்திகரிப்பதற்கு நகரத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ற அளவில் அறிவியல் பூர்வமான முறையில் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இந்த குறைகளை எல்லாம் மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லவும், திட்டங்களை வகுக்கவும், விரைவாக செயல்படுத்தவும் மக்கள் பிரதிநிதிகள் தேவை. ஆனால் சில ஆண்டுகளாக உள்ளாட்சி அமைப்புகளில் இந்த வாய்ப்பே இல்லாமல் போய் விட்டது. தற்போது நடைபெறும் உள்ளாட்சி தேர்தல்கள் மூலமாக மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்து எடுக்கப்பட உள்ளனர். எனவே மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. அதில் தவறேதுமில்லை. தேவையை கேட்பது மக்களின் உரிமை, அதை செய்து தரவேண்டியது உள்ளாட்சி அமைப்புகளின், அதன் பிரதிநிதிகளின் கடமை. அதனை செய்வார்கள் என நம்புகிறோம். அத்தகைய நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உள்ளாட்சிகளில் நல்லாட்சி மலரட்டும்!

**மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாக்கடை, சாலை வசதிகள் உள்ளிட்டவற்றை செய்து தரும் பொறுப்பில் நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள் உள்ளன. ஆனால் அதே அளவுக்கு அவற்றுக்கு நிதி ஆதாரமும், மற்ற ஆதாரங்களும் உள்ளதா என்று பார்த்தால் இல்லை என்றே கூற வேண்டும்.**

# புரிந்துணர்வு ஒப்பந்தம்




புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிறகு எல் & டி பிரதிநிதிகளுடன் எஸ்.என்.ஆர் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசாமி மற்றும் கல்லூரியின் முதல்வர் அலமேலு.

தி கோவை மெயில்

ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி மற்றும் எல் & டி தொழில்நுட்ப சேவை பிரிவு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், எல் & டி தொழில்நுட்ப சேவை பிரிவில் தலைமை மனிதவள மேம்பாட்டு அதிகாரி லட்சுமணன் மற்றும் எஸ்.என்.ஆர் சன்ஸ் சாரிட்டபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயண சுவாமி ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இக்கல்லூரியின், சிறப்பு பாடத்திட்டங்களில் வளர்ந்துவரும் களங்களான சைபர் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, டேட்டா சயின்ஸ், ஆக்குமெண்டெட் மற்றும் வெர்ச்சுவல் ரியாலிட்டி, ரோபோடிக்ஸ் அண்ட் ஆட்டோமேஷன், சென்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் மின்சார வாகனம் ஆகியவற்றை கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் எல் & டி ஆராய்ச்சி மேம்பாட்டு துறையின் உதவி கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர்கள் இன்டர்ன்ஷிப் மற்றும் வேலை வாய்ப்பு பெறவும், கல்லூரி பேராசிரியர்கள் சைபர் பாதுகாப்பு மற்றும் சிறப்பு ஆசிரியர் பயிற்சி பெற பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கிறது.

விழாவிற்கு எல் & டி தொழில்நுட்ப சேவையின் பொறியியல் அகாடமி இயக்குனர் ஆச்சாரியா, டிஜிட்டல் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தலைமை நிதின் ஜெயின், டிஜிட்டல் தயாரிப்புகளின், தலைமை அதானு நியோகி, டிஜிட்டல் ஹெல்த் தலைமை முகுந்த குமார் மற்றும் பிரகாஷ் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

வெளிநாட்டு பல்கலை ஆராய்ச்சி மாணவர்களுக்கு

# இந்துஸ்தான் ஆசிரியர்கள் வழிகாட்டல்

தி கோவை மெயில்

இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இருபது ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்ற இரு ஆசிரியர்கள், வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாணவர்களுக்கு வழி காட்டுதலை வழங்கினர்.

கல்லூரி நிர்வாகத்தின் ஒப்புதலின் பேரில் அனுப்பி வைக்கப்பட்டு தங்களது ஆராய்ச்சி அனுபவங்களான செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் தொழில்நுட்பத்தை ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு வழங்கினர்.

கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் துறை பேராசிரியர் லக்ஷ்மணன் துபாயில் உள்ள ஹையர் காலேஜ் ஆப் டெக்னாலாஜிக்கு கௌவுரவ விரிவுரையாளர் ஆக சென்று ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பற்றிய தற்போதைய ஆராய்ச்சி மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றி விளக்கம் அளித்ததுடன் அதன் செயல்பாடுகளை கணினி மூலம் செயல் விளக்கமும் கொடுத்தார். அக்கல்லூரியின் ஆராய்ச்சி மேம்பாட்டுத்துறை தலைவர் ஜிம்மிஸ் அஹமது கூறுகையில் பேராசிரியரின் அறிவுரை மற்றும் விளக்கம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று கூறினார்.



நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், கம்ப்யூட்டர் அப்ப்ளிகேஷன் துறை பேராசிரியர் லக்ஷ்மணனை பாராட்டுகிறார். உடன், கல்லூரியின் முதல்வர் ஜெயா, முதன்மை அலுவலர் கருணாகரன், டீன் மகுடேஸ்வரன்.

மேலும், இயந்திரவியல் துறை பேராசிரியர் மோகன்ராஜ், கஜகஸ்தானின் எஸ் நொவ் பல்கலைக்கழகத்து கௌவுரவ விரிவுரையாளர் ஆக சென்று ஆற்றல் சேமிப்பு மற்றும் மேம்படுத்துதல் தொழில்நுட்பத்தை முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

பல்கலைக்கழகத்தின் ஆற்றல் சேமிப்பு துறை தலைவர் கல் தேவ் கூறுகையில், கடந்த மூன்று ஆண்டுகளாக பேராசிரியரின் அறிவுரை இத்துறையை மேம்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்று கூறியதுடன் கல்லூரியின் நிர்வாகத்திற்க்கு நன்றி கூறினார்.

கல்லூரியின் தாளாளர் சரஸ்வதி கண்ணையன் கூறுகையில், ஆசிரியர்கள் வெளிநாட்டு மாணவர்களின் ஆராய்ச்சிக்கு நாம் உதவுவது இந்தியாவுக்கே பெருமை என்று கூறினார்.

# உங்கள் எதிர்காலத்தை நீங்களே வடிவமையுங்கள்!

சு.ரம்யா
தி கோவை மெயில்

நிராகரிப்பு, ஏமாற்றம், தோல்வி ஆகியவற்றை நாம் ஏதோ ஒரு கட்டத்தில் வாழ்வில் சந்தித்திருப்போம். சில சமயங்களில் அதில் இருந்து மீண்டு வருவது சவாலான ஒன்றாக இருக்கும். இந்த பதிவில் நாம் காண போவது தொடர் நிராகரிப்பை சந்தித்த ஒருவர், ஒரு சந்தர்ப்பத்தில் உலகின் மிகப்பெரும் பணக்காரர்களுள் ஒருவரானதைப் பற்றியும், பணத்தை நோக்கி வாழ்நாள் முழுவதும் ஓடிக்கொண்டிருக்காமல் 'இது போதும்' என முடிவெடுத்து தான் உருவாக்கிய சாம்ராஜ்ஜியத்தின் பதவியை விட்டு விலகியவருமான ஒருவரைப் பற்றி தான் காண போகிறோம்.

வேலைக்காக ஒவ்வொரு நிறுவனத்திலும் விண்ணப்பித்தும் அனைத்திலும் தோல்வி. பள்ளி படிப்பை முடித்து கல்லூரி படிப்பை தொடர ஹார்டுவார்டு பல்கலைக்கழகத்தில் 10 முறை முயற்சித்தும் தோல்வி. அன்றைய காலகட்டத்தில் பிரபலமாகி கொண்டிருந்த கே.எஃப் .சி சீனாவில் தன் கிளையை நிறுவி ஆட்களை பணியமர்த்தி கொண்டிருந்தது. விண்ணப்பித்த 24 பேரில் 23 பேரும் தேர்வாகினர். ஜாக் மா என்ற ஒருவர் மட்டும் தேர்வாகவில்லை.

ஆங்கிலத்தில் நாட்டம் கொண்டிருந்த அவர், அதில் இன்னும் மேம்பட வேண்டும் என்று சீனாவில் சுற்றுலா வருபவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து ஆங்கிலம் கற்றுக் கொண்டார். ஒரு கல்லூரியில் ஆங்கிலம் இலக்கியம் கற்க வாய்ப்பு கிடைத்தது. பின்பு ஆங்கில பேராசிரியராக பணியாற்றய அவர் அதன் மீதிருந்த காதலால் நேசித்து தன் பணியை செய்தார்.

ஆனால் அவருக்குள் எப்போதும் அடுத்து என்ன என்ற சிந்தனை இருந்து கொண்டே இருந்தது. மேலும் தன்னை எந்த இடத்திலும் நிரந்தரமாக அடைத்து கொள்ள விரும்பவில்லை. ஒவ்வொரு நிராகரிப்பிலும் அவரின் கனவுகள் தாமதமானதே தவிர முடிந்து விடவில்லை என நம்பினார்.

அமெரிக்கா செல்ல நேர்ந்தபோது அங்கு இணையதள சேவைகளின் எழுச்சியை கண்டார். ஆனால் அப்போது சீனாவில் இணையதள சேவை குறித்து பெரிதாக தெரிந்திருக்கவில்லை. எனவே சீனாவில் இணையதள நிறுவனத்தை தொடங்க முடிவெடுத்து CHINA PAGES என்ற நிறுவனத்தை வங்கியில் கடன் வாங்கி தொடங்கினார். ஆனால் இந்நிறுவனத்தை தொடர முடியாமல் கைவிட்டார்.

அதன்பின் அலிபாபா. காம் என்ற இணைய வர்த்தக நிறுவனத்தை தொடங்கினார். முதல் மூன்று வருடம் நிறுவனம் நட்டத்தில் ஓடியதால் பணியாளர்களுக்கு சம்பளம் தரமுடியாத நிலை இருந்தது. அந்த சமயத்தில் தான் இரண்டு நிறுவனம் அவர் கம்பெனியில் முதலீடு செய்ய முன்வந்தது. Tababao.com என்ற ஆன்லைன் ஷாப்பிங் இணையதளத்தை தொடங்கினார். அப்போதைய சூழலில் இணையதள வியாபாரங்கள் அனைத்தும் நஷ்டத்தில் இயங்க ebay என்ற நிறுவனம் மட்டும் கொடி கட்டி பறந்தது. அந்த சமயத்தில் தான் ஜாக் மா, தனது நிறுவனத்தின் இணைய தள சேவையில் முதல் மூன்று சேவையை இலவசமாக வழங்கினார். மெல்ல மெல்ல சீனாவின் இணைய வர்த்தகம் அவர் கட்டுக்குள் வர ஆரம்பித்தது. அமெரிக்கா பங்கு சந்தைகளில் அவரது பங்குகள் அதிக விலைக்கு சென்றன. சீனாவின் நம்பர் 1 பணக்காரர் ஆனார்.



ஆரம்பத்தில் ஜாக் மாவிற்கு அவர் நினைத்தது கிடைத்திருந்தால் அவரது வாழ்க்கை வேறு திசையில் சென்றிருக்கும். ஒரு விஷயம் கிடைக்கவில்லை என்பது என்றும் முடிவாகாது என்றும், அது இன்னொன்றை தொடங்குவதற்கான ஆரம்ப புள்ளியாக கூட இருக்கலாம் என்பதற்கு ஜாக் மாவின் வாழ்க்கை ஒரு உதாரணம்.

ஜாக் மா இளைஞர்களுக்கு கூறுவது "எதிர்காலத்தை பற்றிய பயம் வேண்டாம், ஆனால் அதை சந்திக்க தேவையான முயற்சியை எடுங்கள், உங்களின் எதிர்காலத்தை வடிவமையுங்கள்" என்பதுதான்.

"உங்களது 20 - 30 வயதில் நல்ல முதலாளியை தேர்ந்தெடுங்கள். அது மிக சிறந்த நிறுவனமாக இருக்க வேண்டும் என்றில்லை. அவரிடம் இருந்து பணியைக் கற்றுக் கொள்ளுங்கள். 30 - 40 வயதில் உங்களுக்காக உங்கள் வாழ்வில் செய்ய வேண்டும் என்று நினைத்த செயலை செய்யுங்கள். 40 - 50 ல் உங்களது 20 வருட அனுபவத்தை கொண்டு நீங்கள் எதில் திறன் உள்ளவர்களாக இருப்பீர்கள் என தோன்றுகிறதோ அதை தேர்ந்தெடுங்கள். 50 - 60 உங்களது நேரத்தை இளம் தலைமுறையினருக்கு கற்றுக் கொடுப்பதில் செலவிடுங்கள்" என்கிறார்.

# Cancer in children is curable



*Dr.Subba Rao, Dean, PSG Hospitals cutting the cake with the victorious children in the presence of Dr. Rumesh Chandar (Left), Dr.Balaji, Director, Coimbatore Cancer Foundation and other staff of the hospital.*

**The Covai Mail**

It is a matter of concern that India has a high prevalence of childhood cancer. Statistics reveal that every year 50,000 children in India between 0-18 years are diagnosed with cancer, and experts feel that the actual numbers may be higher. Cancer can affect children of any age and any section of the society.

International childhood cancer day is celebrated every year on February 15th to create and promote childhood cancer awareness using a gold ribbon. Gold Ribbon symbolizes childhood cancer awareness. Children are precious and pure like gold. In view of their courage, determination and strength they conquer cancer and emerge victorious as heroes.

The commonest cancer in children is blood cancer followed by brain tumors and other solid organ cancers. The common symptoms of blood cancer include easy fatigability, anemia, bleeding from skin and gums, enlarged lymph nodes, liver and spleen, bone and joint pain. It is important to note that these signs and symptoms may not be manifestations of blood cancer all the time but parents should seek a pediatrician's advice in such situations and if suspicion of blood cancer is strong they should be evaluated in a pediatric oncology unit. Severe headache with forceful vomiting, seizures, rapidly enlarging head size in infants, abnormal walking style and behavior can point towards a possible brain cancer. Any rapidly growing swelling anywhere in the body, from head to foot can be a possible solid cancer. Early diagnosis and providing appropriate treatment will help in achieving a better outcome in these children.

According to Dr. Rumesh Chandar, Pediatric Oncologist at PSG Hospitals, for the best outcomes, children with cancer ought to be treated holistically by a team of specialists headed by a pediatric oncologist along with other allied specialists. The greatest challenge in the treatment of childhood cancers is finding a continued social and financial support for the families. PSG hospitals being forefront in health care sector, to effectively deal with this situation, has set up a comprehensive Pediatric Oncology Unit headed by a Pediatric oncologist, Pediatric Surgeons, Pediatric oncology nurses, radiation Oncologists system to provide affordable cancer care to the kids less than 18 years of age. The International Childhood Cancer Day theme for this year is "better survival is achievable Through Your Hands." Let us all come forward to Close the gap in providing affordable childhood cancer care through our hands.

# A Long Walk to Wake the Blood donors in us!

**The Covai Mail**

Kiran Verma is a social worker from Delhi, who is on a mission to create awareness about blood donation across India.

To do that he has undertaken a 21,000 km walk that started all the way from Trivandram last December 28. He has covered various regions of Kerala in the last two months, creating blood-donation awareness there, and has now entered Tamil Nadu.

"I donated blood to a 14-year-old boy Mayank in June, 2016. He was suffering from cancer."

"In August, I got a call from his father that Mayank was no more. The day he died he didn't get a platelet donor. Delhi has about two crore people. Not a single person came forward to donate blood for him," shared Kiran to The Hindu recently. Incidents like this is what made Kiran to undertake various activities to create blood donation awareness.



*Arun Gokul Das (right), Kiran Verma (Center) at IMA Coimbatore, during the program.*

He reached Coimbatore recently and he was welcomed by veteran blood donor Arun Gokul Das, members of Rotary Club of Coimbatore along with All India Blood Donors Group and Indian Medical Association-Coimbatore. Rotary has honored him for his humanitarian efforts while IMA arranged for a Blood Donation camp and open registration for blood donors.

Speaking to The Covai Mail, Kiran said that due to the pandemic, India's blood donors count has got thin, and he sees that the present moment as the apt time to encourage more people to turn as donors.

He said the gap in blood donation mist be solved by 2025, and no one should die waiting for blood.

# JSW One launches one-stop seller app

**The Covai Mail**

JSW One Platforms has launched a one-stop seller app which allows all sellers i.e. distributors, retailers and traders to sell on JSW One Platforms. Sellers can create catalogues, set prices, manage orders and resolve customer queries using the Seller Connect app.

The Seller Connect app is a first-of-its-kind initiative in India's B2B ecosystem. It will play an integral role in digitising and empowering sellers in the manufacturing and construction industries.

The JSW One MSME Seller Connect App enables JSW One approved sellers to track and accept order requirements on the go, monitor business growth as well as receive important industry updates. The seller app will provide visibility of the seller's catalogue to prospective buyers on jswonemsme.com. It also includes a dashboard with business summaries and analyses.

# Microsoft's new Surface Laptop Studio

**The Covai Mail**

Microsoft India announced that the new Surface Laptop Studio will be available from March 8.

Starting at Rs.1,56,999, Surface Laptop Studio is the most powerful Surface ever. Built as the ideal product for developers, creative pros, designers, and gamers, this device brings you the power of a desktop, the portability of a laptop, and a creative studio all in one.

The device features a sleek 14.4" Pixelsense Flow touchscreen, a vibrant 120Hz display, Quad Omnisonic speakers, and immersive Dolby Atmos to help you work, create and play the way you want to.

# Training on Quality Seed Production Techniques



*The Members of TNAU's Department of Pulses, Centre for Plant Breeding and Genetics during the program.*

**The Covai Mail**

The Department of Pulses, Centre for Plant Breeding and Genetics, Tamil Nadu Agricultural University (TNAU) conducted a one-day training program on Quality Seed Production Techniques in Pulses, recently.

It was held in Karuppur village, Krishnarayapuram Taluk, Karur District under the National Agricultural Development Program scheme on 'Augmentation of Seed Replacement Rate in Pulses and Oilseeds through Farmers' Participatory Seed Production (Phase II)'.

S. Sundareswaran, Director, Seed Centre, TNAU, in his Presidential Address stressed the importance of quality seed production and increasing the farmers' income and profit through seed production when compared to grain production. Technical address was delivered by the scientists of Department of Pulses, TNAU.

A. Thanga Hemavathy, Assistant Professor (PBG) explained about the importance and procedures to be followed for maintenance of genetic purity in seed production.

S. Anitta Fanish, Assistant Professor (Agronomy) explained about the various agronomic principles and practices to be followed during seed production in pulses. Integrated Pest and Disease management practices to be followed in pulses were explained by P.S. Shanmugam, Assistant Professor (Agrl. Entomology) and Dr. L. Karthiba, Assistant Professor (Plant Pathology).

About 40 farmers from Karuppur village who are involved seed production in pulses attended the training program and got benefitted. Field visit was organized and pest and disease management was explained to the farmers.

# KG sets Medical Booth at Cbe.Junction

**The Covai Mail**

KG Hospital, joined hands with Railway to set up a Free Medical Booth at Coimbatore Railway Station recently.

Chairman of KG Hospital Dr.G.Bakthavathsalam shared that a paramedic and a nurse will be present in this medical Booth 24/7, and any passenger visiting or leaving this premises can approach the booth if they meet with any sudden health issues or injuries. First aid will be given at this booth.

Also an ambulance will be located nearby, and in case of emergency, the travellers can be rushed to the hospital. The booth comes with medicine and equipment needed for giving First-Aid.

Sources shared that Harikishna, Chief Divisional Commercial Manager, Railways, Salem made the inaugural with the KG Hospital's Chairman.




# KAHE wins State Handball Tournament



*Karpagam Academy of Higher Education (KAHE) shared that its Handball players have bagged the First place in the State Level Open Handball Alumni Trophy Tournament. During the finals, KAHE and Tamilnadu AR Police Team clashed for the title, and it ended in 36-24, and making the Academy shine supreme.*

# Renacon to invest Rs.100 Cr. to set up new Plant

**The Covai Mail**

Erode based Renaatus Procon Pvt Ltd , one of the leading manufacturers of AAC Blocks in the country is now planning to invest Rs.100 crore for setting up a new plant at SIPCOT industrial estate in Perunduari near Erode, for manufacturing of Renacon AAC Blocks. The factory will be fully automated with world-class technology and having the highest manufacturing capacity in the country.

The construction of the factory is steadily progressing and the commercial production is likely to be started by end of March this year.

Renaatus Group Chairman & Managing Director Selva Sundram & CEO G. Suresh Kumar said, Renacon is serving the industry for the last 10 years and already have two plants located strategically at Arcot and Tirunelveli. With the opening of the third plant at Perundurai, the logistical cost will reduce considerably and the company will be able to service the customers of Tamil Nadu, Kerala and Karnataka better.

The incumbent factory will create direct job opportunities to over 300 employees and indirect employment for over 500 employees.

# IT Dept. holds Outreach Program

**The Covai Mail**

The Income Tax Department, Coimbatore organized an Outreach Program on Tuesday.

Geetha Ravichandran, Pr.Chief Commissioner, Tamil Nadu and Pondicherry was the Chief Guest.

She spoke about various aspects of IT at the event which was attended by various representatives of the industry and MSME Sector. CODISSIA President Ramesh Babu, FIEO President A. Sakthivel, ICCIC President C.Balasubramanian, SIEMA President K.V.Karthik, Coimbatore Jewellery Manufacturers Association President B. Muthu Venkatraman and many others took part in the event.

It was held in the presence of R.Ravichandran, Chief Commissioner, TDS, Chennai and presided by Bhupal Reddy, Chief Commissioner, IT Dept.,Coimbatore.

To Advertise in THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan